# DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 265 of 2024 |
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | பொன்மொழி |
| Father's Name | : | பொன்னுசாமி |
| Village | : | பாலிநாயனப்பள்ளி |
| Taluk | : | பர்கூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கூலி |
| Age | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 06th day of March 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது பாலிநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். சென்னை தேசிய நெடுஞ்சாலையில் டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். விபத்தில் இறந்து போன முனிராஜ் எனது கணவர் ஆவார். கடந்த 15.07.2022 அன்று அதிகாலை 06.00 – 06.30 மணிக்குள் நான் எனது தங்கை வீட்டில் இருந்த போது, எனது மைத்துனர் வெங்கடேஷ் என்பவர் எனக்கு போன் செய்து எனது கணவருக்கு ஓரப்பம் சந்திப்பு அருகே விபத்து ஏற்பட்டதாக தகவல் கேள்விப்பட்டதன் பெயரில் சம்பவ இடம் சென்று பார்த்தோம். அதற்குள் அடிபட்ட அவரை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் எடுத்து சென்றிருந்தார்கள். நான் அரசு மருத்துவமனைக்கு சென்று எனது கணவரை பார்த்தேன். அவர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாகவும், அவருக்கு உடலில் கால் முழுவதுமாக இல்லாமல் இருந்தது. இது சம்பந்தமாக நான் கந்திக்குப்பம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும், நான் சொல்ல சொல்ல தான் எழுதினார்கள். புகாரை யார் எழுதினார்கள் என்றால் யார் எழுதினார்கள் என்று தெரியாது, காவல் நிலையத்தில் உள்ளவர் எழுதினார். நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் இளங்கலை முடித்துள்ளேன். நீங்கள் சம்பவ இடம் செல்லும் போது உங்கள் கணவர் அங்கு இல்லை என்றால் சரிதான். சுரேஷ் உங்களுக்கு என்ன உறவு என்றால் கொழுந்தனார். விபத்து நடக்கும் போது மேற்படி சுரேஷ் எங்கிருந்தார் என்றால் பாலிநாயனப்பள்ளியில் இருந்தார். குப்புசாமியின் மகன் வெங்கடேசன் உங்களுக்கு என்ன உறவு என்றால் கொழுந்தனார் ஆவார். அவர் விபத்து நடக்கும் போது எங்கிருந்தார் என்றால் ஓரப்பம். உங்களை போலீசார் இவ்வழக்கு சம்பந்தமாக எப்போது விசாரித்தார்கள் என்றால் விபத்து நடந்த காலை 09.00 – 10.00 மணியளவில் விசாரித்தார்கள். விபத்து எப்படி நடந்தது என்ற விவரம் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். விபத்திற்கான காரணம் volvo பஸ் டிரைவர் தான் என்றால் இல்லை, கார் டிரைவர் தான் காரணம். உங்கள் கணவர் ஓட்டி சென்ற வண்டியின் நம்பர் தெரியுமா என்றால் தெரியும். புகாரை போலீசாரே எடுத்துக் கொண்டனர் என்றால் சரியல்ல, நான் சொல்ல சொல்ல தான் எழுதினார்கள். புகாரில் உள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :–

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 265 of 2024 |
| Deposition of witness for | : | PW2 |
| Name | : | சுரேஷ் |
| Father's Name | : | ராஜப்பன் |
| Village | : | பாலிநாயனப்பள்ளி |
| Taluk | : | பர்கூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | எலெக்ட்ரீசன் |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 06th day of March 2025.
எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது பாலிநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எலெக்ட்ரீசியன் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது தூரத்து உறவினர் ஆவார். விபத்தில் இறந்து போன முனிராஜ் என்பவரும் எனது உறவினர் ஆவார். கடந்த 15.07.2022 அன்று காலை சுமார் 06.00 – 06.15 மணியளவில் ஒரப்பம் சந்திப்பு அருகே உள்ள டீக்கடையில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது விபத்தில் இறந்து போன முனிராஜ் சென்னை – கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் ஸ்கூட்டியில் வந்து கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் வந்த ஒரு கார் வந்து அவர் பயணம் செய்த ஸ்கூட்டியின் மீது இடித்தது. அவர் எகிறி கீழே விழுந்து விட்டார். அதற்கு பின்னால் ஒரு கண்டெய்னர் லாரி ஒன்று அவரின் நெஞ்சுப்பகுதியில் ஏறியதில் நெஞ்சின் கீழ் பகுதி முழுவதும் நசுங்கியது. நான் அதை பார்த்த உடன் முனிராஜ்ஜின் அம்மாவிற்கு போன் மூலமாக தகவல் கொடுத்தேன். அதன் பிறகு உறவினர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். அந்த சமயத்தில் அங்கே கூட்டம் அதிகமாக இருந்ததால் எதிரியை நான் பார்க்கவில்லை.

இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

நீங்கள் எவ்வளவு நேரம் வரை சம்பவ இடத்தில் இருந்தீர்கள் என்றால் சுமார் 1 மணி நேரம் இருந்தேன். காவல் நிலையத்திற்கு சென்றீர்களா என்றால் சென்றேன். அப்போது மணி என்ன இருக்கும் என்றால் 12.00 – 01.00 மணி இருக்கும். சம்பவ இடத்திற்கும் டீக்கடைக்கும் சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. முனிராஜ்ஜின் மனைவிக்கு நீங்கள் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான், பக்கத்தில் இருந்தவர்கள் தான் சொன்னார்கள். விபத்திற்கு முன்பு எவ்வளவு தூரத்திலிருந்து volvo கண்டெய்னர் வண்டியை பார்த்தீர்கள் என்றால் 40 மீட்டருக்கு முன்பு பார்த்தேன். இவ்வழக்கு சம்பந்தமாக நீங்கள் எழுதி புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. சத்தம் கேட்டு பக்கத்தில் போய் பார்த்தீர்களா என்றால் என் கண் முன்னால் தான் விபத்து நடந்தது. நீங்கள் விபத்தை நேரில் பார்க்கவில்லை, விபத்து நடந்த போது நீங்கள் வீட்டில் இருந்தீர்கள் என்றால் சரியல்ல. இறந்து போனவர் உங்கள் உறவினர் என்பதால் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. விபத்து நடந்த பிறகு கார், லாரி ஆகியவற்றை காவல் நிலையத்திற்கு எடுத்து சென்று விட்டார்களா என்றால் போக்குவரத்து நெரிசலை சரி செய்ய வேண்டி சாலை ஓரமாக அங்கேயே நகர்த்தி நிறுத்தி விட்டார்கள். விபத்திற்கு காரணம் இறந்து போனவரின் அஜாக்கிரதை தான் என்றாலும், சிக்னல் காட்டாமல் திடீரென வலது புறம் திரும்பியது தான் என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 265 of 2024 |
| Deposition of witness for | : | PW3 |
| Name | : | வெங்கடேசன் |
| Father's Name | : | D. குப்புசாமி |
| Village | : | பாலிநாயனப்பள்ளி |
| Taluk | : | பர்கூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | Government Staff |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 06th day of March 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது பாலிநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் கிருஷ்ணகிரி அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். விபத்தில் இறந்து போன முனிராஜ் எனது பெரியப்பா மகன் ஆவார். கடந்த 15.07.2022 அன்று வெள்ளிக்கிழமை காலை சுமார் 06.00 – 06.30 மணியளவில் நான் ஒரப்பம் சந்திப்பு அருகே நான் நின்று கொண்டிருந்தேன். விபத்தில் இறந்து போன முனிராஜ் சென்னை – கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் தனக்கு சொந்தமான நீல நிற ஸ்கூட்டியில் வந்து கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் வந்த கார் அவர் மீது இடித்து விட்டது. மேற்படி கார் இடித்ததனால் அவர் அதே சாலையில் வந்து கொண்டிருந்த ஒரு லாரியின் அடியில் அவர் விழுந்ததில் வயிற்றுப்பகுதியில் இருந்து கால் வரை முழுவதுமாக நசுங்கி இருந்தது. இது சம்பந்தமாக அவரது மனைவி அ.சா.1 ற்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். லாரியின் முழு பகுதியும் அடியில் இருந்த உடல் மீது ஏற்றி ஓரம் கட்டிய பிறகு தான் அவருடைய உடலை எடுக்க முடிந்தது. அதன் பிறகு அரசு மருத்துவமனையில் இருந்து அ.சா.1 மூலமாக காவல் நிலையத்தில் எழுத்துமூலமாக புகார் அளித்தேன். காரை

ஓட்டி சென்ற நபரை நான் அந்த நேரத்தில் பதட்டமாக இருந்ததால் பார்க்கவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

நீங்கள் சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் அங்கிருந்தீர்கள் என்றால் சுமார் 08.00 – 08.15 மணி வரை அங்கு தான் இருந்தோம். முனிராஜ் எந்த சைகையும் காட்டாமல் திடீரென வலது பக்கமாக வண்டியை திருப்பியதால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நீங்கள் இருந்த இடத்திற்கும் விபத்து நடந்த இடத்திற்கும் 100 – 150 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் 100 மீட்டருக்கும் குறைவாக தான் இருக்கும். நீங்கள் வழக்கமாக டீ சாப்பிடும் டீக்கடை உரிமையாளர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் சொல்லும் இடத்தில் டீக்கடையே கிடையாது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது சம்பவ இடத்தில் டீக்கடை மளிகைக்கடை இருப்பதால் சுமார் 20, 25 பேர் அங்கு இருந்திருப்பார்களா என்றால் இருந்திருப்பார்கள், அங்கு காய் கடையும் உண்டு. விபத்திற்கு முன்பு முனிராஜ் அவர்களை எப்போது பார்த்தீர்கள் என்றால் 05.50 – 06.00 மணியளவில் முனிராஜ் எங்களை தனது வாகனத்தில் கடந்து சென்றதை பார்த்தோம். நீங்கள் அவரைப் பார்த்து எவ்வளவு நேரம் கழித்து விபத்து ஏற்பட்டது என்றால் 06.00 மணிக்கு மேல் 06.30 மணிக்குள் விபத்து நடந்து முடிந்து விட்டது. 05.50 – 06.00 மணிக்குள் முனிராஜ்ஜை பார்த்ததாக சொல்லியுள்ளீர்கள், எந்த இடத்தில் அவரை பார்த்தீர்கள் என்றால் ரெயில்வே ஸ்டேசன் பஸ் நிறுத்தம் அல்லது PSV கல்லூரி பஸ் நிறுத்தம். PSV கல்லூரி பஸ் நிறுத்தத்ததில் நீங்கள் நின்று கொண்டிருக்கும் போது இறந்து போனவர் உங்களை கடந்து சென்றாரா என்றால் ஆமாம். PSV கல்லூரி பஸ் நிறுத்தத்திற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே 4 கி.மீ. தூரம் இருக்குமா என்றால் 1 கி.மீ. தூரத்திற்குள் தான் இருக்கும். விபத்து நடந்த இடத்திற்கு நீங்கள் வரும் போது விபத்து நடந்து முடிந்திருந்தது என்றால் சரியல்ல. PSV கல்லூரி பஸ் நிறுத்தத்தில் இருந்து சம்பவ இடம் வருவதற்கு, 1 கி.மீ.க்கும் குறைவாக இருந்தால், ஒன்று அல்லது இரண்டு நிமிடங்களில் வந்து விடலாம் என்றால் இல்லை, 10 நிமிடமாவது ஆகும். PSV கல்லூரி பஸ் நிறுத்தத்தில் இருந்து முனிராஜ் சென்ற பிறகு அவர் பின்னால் நீங்கள் கிளம்பி வந்தீர்களா என்றால் 10 நிமிடம் கழித்து தான் கிளம்பினேன். அவ்வாறு நீங்கள் செல்லும் போது தனியாக தான் சென்றீர்கள் என்றால் ஆமாம். விபத்தை நீங்கள் நேரில் பார்க்கவில்லை, இறந்து போனவர் உங்கள் உறவினர் என்பதால் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. PSV கல்லூரி பஸ் நிறுத்தத்தில்

இருந்து முனிராஜ் க்கு பின் கிளம்பி விட்டு, அவருக்கு முன்பாகவே சம்பவ இடம் வந்து சம்பவம் நடந்ததை நேரில் பார்த்ததாக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 265 of 2024 |
| Deposition of witness for | : | PW4 |
| Name | : | முனுசாமி |
| Father's Name | : | துரைசாமி |
| Village | : | பாலிநாயனப்பள்ளி |
| Taluk | : | பர்கூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | – |
| Age | : | 85 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 06th day of March 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது பாலிநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன முனிராஜ் என்னுடைய மகன் ஆவார். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் ஞாபகம் இல்லை. காலை சுமார் 07.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த போது எனது தம்பி மகன் வெங்கடேசன் எனக்கு போன் செய்து ஓரப்பத்தில் எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்ன தகவலின் பெயரில் நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது, எனது மகனின் மீது ஒரு லாரி ஏறியிருந்தது. அதன் பிறகு காவல் நிலையம் சென்று இது சம்பந்தமாக புகார் அளித்தோம். இது சம்பந்தமாக எனது மகனின் பிரேத விசாரணையில் கலந்து கொண்டேன். காவல் நிலையத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

விபத்து நடந்த இடத்திற்கு நீங்கள் சென்று பார்த்த போது மணி என்ன இருக்கும் என்றால் 07.00 – 07.30 மணி இருக்கும். நீங்கள் சென்ற பிறகு தான் லாரிக்கு அடியில் கிடந்த உங்கள் மகனின் உடலை எடுத்து

தனியாக வைத்தார்கள் என்றால் ஆமாம். வழக்கு சம்பந்தமாக போலீசார் உங்களை விசாரித்தார்களா என்றால் ஸ்டேசனில் வைத்து கையெழுத்து போட்டேன்.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஓம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 265 of 2024 |
| Deposition of witness for | : | PW5 |
| Name | : | பாரதிராஜா |
| Father's Name | : | முனுசாமி |
| Village | : | பாலிநாயனப்பள்ளி |
| Taluk | : | பர்கூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | Courier |
| Age | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 06th day of March 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது கிருஷ்ணகிரியில் குடியிருந்து வருகிறேன். பொறியியல் கம்பெனியில் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். விபத்தில் இறந்து போன முனிராஜ் எனது பெரியப்பா மகன் ஆவார். சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு காலை 06.00 மணியளவில் நான் நடைபயிற்சி மேற்கொண்டிருந்த போது சாட்சி வெங்கடேசன் எனக்கு போன் செய்து ஓரப்பம் அருகே முனிராஜ்–க்கு விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாக தகவல் சொன்னதன் பேரில் ஓரப்பம் பேருந்து நிறுத்தத்திற்கு சென்று பார்த்தேன். சம்பவ இடத்தில் இருந்து நானும், சாட்சி வெங்கடேசனும் தான் முனிராஜ்ஜை ஆம்புலன்சில் ஏற்றி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இறந்து போன முனிராஜ் ஸ்கூட்டி வாகனத்தில் செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். அவரது பிரேத விசாரணையில் கலந்து கொண்டேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

போலீஸ் விசாரணையில் நீங்கள் சம்பவ இடத்திற்கு போனதாகவும், இறந்து போனவரை நீங்களும், வெங்கடேசனும் சேர்ந்து ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பி வைத்ததாகவும் சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். விபத்து சம்பந்தமாக யார் உங்களுக்கு தகவல் கொடுத்தார் என்ற விவரத்தையும் போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லி உள்ளேன். விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்ற விவரம் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது. நீங்கள் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை, சம்பவ இடத்திற்கு சென்றதாக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை, போலீசார் உங்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்து போனவர் உங்கள் உறவினர் என்பதால் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :–

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.